


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு, கல்லூரி மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (25.01.2017) கொடியசைத்து துவக்கி வைத்தார். மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ. இளங்கோ உடனுள்ளார்.

செ.வெ.எண்: 64/2017 நாள்: 25.01.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு, கல்லூரி மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை இன்று (25.01.2017) கொடியசைத்து துவக்கி வைத்து, பேரணியில் கலந்து கொண்டார்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவுபடி, ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 25-ம் தேதி தேசிய வாக்காளர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு, கல்லூரி மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (25.01.2017) கொடியசைத்து துவக்கி வைத்து, பேரணியில் கலந்து கொண்டு, தெரிவித்ததாவது:-

இந்தியா தேர்தல் ஆணையத்தின் உத்தரவுபடி, ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 25-ம் தேதி தேசிய வாக்காளர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த நாளில், பொதுமக்களிடையே வாக்களிப்பது அவசியம் குறித்து, விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக 18 வயது பூர்த்தியடைந்த வாக்காளர்கள், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதோடு, எதிர்வரும் தேர்தலில் அனைத்து வாக்காளர்களும், வாக்களித்து, நமது ஜனநாயக கடமையை நிலைநாட்ட வேண்டும் என தெரிவித்தார்.

இப்பேரணியில் நாகர்கோவில் பெண்கள் கிறிஸ்துவ கல்லூரி, தென்னிந்திய ஹிந்து கல்லூரி, ஸ்காட் கிறிஸ்துவ கல்லூரி, ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரி, ஹோலி கிராஸ் கல்லூரி, கோணம் இன்ஜினியரிங் கல்லூரி, கோணம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி போன்ற கல்லூரியிலிருந்து சுமார் 500-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் விழிப்புணர்வு பதாகங்களை கையில் ஏந்தியபடி கலந்து கொண்டனர். இப்பேரணியானது மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் துவங்கி, செட்டிக்குளம் வழியாக இந்து கல்லூரி சென்று நிறைவடைந்தது.

முன்னதாக மைலாடி, பூவார் நினைவு கழகத்தின் சார்பாக திரு. பழனியாபிள்ளை அவர்கள் தலைமையில் சிலம்பாட்டம் நடைபெற்றது. பின்னர் அபுபக்கர் அவர்கள் கண்ணை கட்டிக்கொண்டு, இரு சக்கர வாகனத்தை ஓட்டி, பொதுமக்களிடையே வாக்களிப்பது அவசியம் குறித்து, விழிப்புணர்வு பணிகளை மேற்கொண்டார்.

பேரணியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ. இளங்கோ, நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர்.ராஜ்குமார், அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் திரு. அருளரசு, தேர்தல் வட்டாட்சியர் திரு. சுப்பிரமணியன், ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.